# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 5

| | | | |
|---|---|---|---|
| Name | : இந்துமதி | Caste | : |
| Father's Name/ Husband's Name | : க/பெ.சிவசங்கர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th day of May 2024.

(Accused present)

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது கோவை மாவட்டம், வால்பாறை உட்கோட்டம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை பெண் காவலராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 2016ம் ஆண்டு பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்தபோது பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலைய குற்ற எண்.7/2016 வழக்கில் பாதிக்கப்பட்ட பெண் பிருந்தா இவ்வழக்கின் எதிரி செல்வன், பாதிக்கப்பட்ட பெண் பிருந்தாவிற்கு பிறந்த பெண் குழந்தை அனுசியா ஆகியோர்களுக்கு DNA டெஸ்ட் பரிசோதனைக்காக பொள்ளாச்சி நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் கடிதம் பெற்றும், நீதிமன்றத்தில் இருந்து மேற்படி மூவருக்கும் பொள்ளாச்சி தலைமை அரசு மருத்துவமனையில் FTA கார்டு மூலம் இரத்த மாதிரி சேகரித்து அதனை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து இரசீது எண். 3/2018 பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். மேற்படி இரசீது **அசாஆ 4** ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. ஆய்வாளர் விசாரணையில் 05.02.2018 அன்று மேற்படி இரசீதை நான் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி தேதியை தட்டச்சர்

கைதவறுதலாக தட்டச்சு பிழையாக தட்டச்சு செய்துள்ளார். 05.01.2018 அன்று மேற்படி இரசீதை நான் பெற்றேன். FTA கார்டை நீதிமன்றத்தில் இருந்து நான் பெற்றுக்கொண்டேன். எந்த தேதியில் FTA கார்டை பெற்றேன் என்று நினைவில்லை. எதிரி செல்வன் என்பவருக்கு DNA டெஸ்ட்க்கு ஆஜராகுமாறு அழைப்பனை சார்வு செய்துள்ளேன்.

2. அந்த அழைப்பானையை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் அது புலன் விசாரணை அதிகாரிக்குதான் தெரியும். மேற்படி அழைப்பாணையை நான் தயார் செய்யவில்லை. அதை யார் தயார் செய்தார்கள் என்று பல வருடங்கள் ஆனதால் தற்போது நினைவில்லை. மேற்படி FTA கார்டுகளை 3 தனித்தனி கவர்களில் கொடுத்தார்களா அல்லது ஒரே கவர்களில் கொடுத்தார்களா என்று தற்போது நினைவில்லை. FTA கார்டின் வடிவம் என்ன என்றால் நீதிமன்றத்தில் இருந்து கொடுக்கப்பட்டதால் கவரை நான் பிரித்து பார்க்கவில்லை எனவே அதன் வடிவம் என்ன என்று எனக்கு தெரியாது.

3. அசா 1 பிருந்தாவிற்கு அழைப்பாணை சார்வு செய்தேனா என்று எனக்கு நினைவில்லை. FTA கார்டுகள் என் கைக்கு வந்த பிறகு எத்தனை நாட்களில் அசா 1, எதிரி மற்றும் குழந்தை அனுசியா மரபணு பரிசோதனை நடைபெற்றது என்றால் ஓரிரு தினங்களுக்குள் நடைபெற்றது. காவல் ஆய்வாளர் மேற்படி பணிக்கு என்னை நியமித்தார். வாய் மூலமாக உத்தரவு பிறப்பித்தார். நீதிமன்றத்தில் ஆய்வாளர் என் பெயரில் கொடுத்த கடவுச்சீட்டை ஒப்படைத்து நீதிமன்றத்தில் இருந்து FTA கார்டுகளை நான் பெற்றுக்கொண்டேன்.

4. காவல் ஆய்வாளர் எனக்கு தனிப்பட்ட முறையில் மேற்படி FTA கார்டுகளை நீதிமன்றத்தில் இருந்து பெறுவதற்கு எழுத்துபூர்வமான உத்தரவு பிறப்பிக்கவில்லை பொதுவாக அவ்வாறு காவலர்களுக்கு எழுத்துபூர்வமான உத்தரவு பிறப்பிக்கும் வழக்கம் இல்லை பொதுவாக காவல் நிலையத்தில் இருந்து காவல் ஆய்வாளர் நீதிமன்றத்திற்கு எந்த காவலரை இம்மாதிரியான பணிகளுக்கு நியமித்துள்ளார் என்பது குறித்து கடிதம் அனுப்பிவைப்பார். அந்த கடிதத்தின் அடிப்படையில் மேற்படி காவலரிடம் நீதிமன்றத்தில் இருந்து காவலருக்கு ஒதுக்கப்பட்ட பணிக்கு உண்டான பொருட்கள் ஒப்படைக்கப்படும்.

5. FTA கார்டுகளை பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் இரத்த மாதிரி சேகரம் செய்யும் பணியில் இருக்கும் ஒரு ஆண் பணியாளரிடம் கொடுத்தேன்.

அவ்வாறு FTA கார்டுகளை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டதற்கு மருத்துவமனை பணியாளர் ஒப்புகை எதுவும் வழங்கினாரா என்று தற்போது நினைவில்லை. பொதுவாக காலை 08.00 மணிக்கு நிலைய பணிக்கு செல்வேன்.

6. FTA கார்டை நீதிமன்றத்தில் இருந்து சுமார் எத்தனை மணிக்கு பெற்றேன் என்று தற்போது நினைவில்லை. FTA கார்டுகளை நீதிமன்றத்தில் இருந்து பெற்ற பிறகு எதிரி, அசா1 மற்றும் குழந்தை அனுசியா ஆகியோருக்கு தகவல் தெரிவித்தேன். FTA கார்டுகளை வாங்கிய பின்னர் எந்த தேதியில் எத்தனை மணிக்கு இரத்த மாதிரி சேகரம் செய்வதற்கு சம்மந்தப்பட்ட நபர்களை பொள்ளாச்சி அரசு மருத்துவனைக்கு வரச்சொன்னேன் என்று தற்போது எனக்கு நினைவில்லை.

7. நீதிமன்றத்தில் இருந்து FTA கார்டுகளை நான் பெற்ற பிறகு எத்தனை மணிக்கு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அவற்றை ஒப்படைத்தேன் என்று தற்போது நினைவில்லை. நான் மேற்படி FTA கார்டுகளை மருத்துவமனையில் ஒப்படைத்த சமயத்திலேயே எதிரி, அசா 1 மற்றும் குழந்தை அனுசியா ஆகியோர் மருத்துவமனையில் ஆஜராகிவிட்டார்கள்.

8. நான் மேற்படி FTA கார்டுகளை மருத்துவமனையில் உள்ள ஆண் பணியாளரிடம் ஒப்படைத்த சமயத்திலேயே இரத்த மாதிரி சேகரம் செய்வதற்காக சம்மந்தப்பட்ட மூவரையும் அவரிடம் ஒப்படைத்தேன். இரத்த மாதிரி சேகரம் செய்வதற்கு முன்பாக மருத்துவமனை பணியாளர் எதிரி, அசா 1 மற்றும் குழந்தை அனுசியா ஆகியோரின் அடையாள அட்டைகளை பரிசோதனை செய்தாரா என்றால் தற்போது நினைவில்லை ஆனால் மேற்படி மூவரையும் மருத்துவமனை மணியாளரிடம் நான் அடையாளம் காண்பித்தேன்.

9. மருத்துவமனை பணியாளர் முறைப்படி எதிரி, அசா 1 மற்றும் குழந்தை அனுசியா ஆகியோரிடமிருந்து இரத்தத்துளிகளை எடுத்து FTA கார்டுகளில் வைத்து சீல் வைத்து என்னிடம் கொடுத்தார் என்றால் சரிதான். அவ்வாறு முத்திரை வைத்தற்குண்டான முத்திரை மாதிரி படிவத்தை என்னிடம் கொடுத்தார்களா என்று தற்போது நினைவில்லை. சம்மந்தப்பட்ட 3 நபர்களிடமும் எத்தனை மாதிரிகள் எடுத்தார்கள் என்றால் தற்போது சரியாக நினைவில்லை. FTA கார்டுகளை பெற்றுக்கொண்டு மருத்துவமனையில் ஒரு இரசீது கொடுத்தார்கள். மேற்படி இரசீதினை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

10. இரத்த மாதிரிகளை சேகரம் செய்து FTA கார்டுகளில் வைத்து ஒரே கவரில் முத்திரை வைத்து மருத்துவ பணியாளர் என்னிடம் கொடுத்தார். மருத்துவமனையில் இது தவிர வேறு எந்த ஆவணமும் என்னிடம் கொடுக்கவில்லை. உரிய சட்ட நடைமுறைப்படி நான் பின்பற்றிய நடைமுறைகள் அமையவில்லை என்றாலும் எனவே எனது செயல்முறை மற்றும் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. எதிரியை முறைப்படி அடையாளம் காட்டாமல் நான் வாய்மொழியாக ஒரு நபரை அடையாளம் காட்டிய முறையில் மருத்துவமனையில் அந்த நபரிடம் இரத்த மாதிரி பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.M..A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.